[2023 மார்ச் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

சுற்றுச் சுவர்

***23088—திரு. செ. கிருஷ்ணமுரளி:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *கடையநல்லூர் தொகுதி, அச்சன்புதூர் பேரூராட்சி, 5–வது வார்டு, மணக்காடு தவ்ஹீத் பள்ளிவாசலுக்குச் சொந்தமான மையவாடியைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) *1995 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டம், பிரிவு 36–ன்கீழ், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மசூதிகள், மதரசாக்கள், தர்காக்கள் ஆகியவற்றைப் பழுதுபார்ப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும் 1999 ஆம் ஆண்டு முதல் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் பெருமராமத்துப் பணி துவக்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர், மக்கள் முதல்வர் அவர்களால் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 77 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்களால் கேட்கப்பட்டுள்ள கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் வட்டம், அச்சன்புதூர் பேரூராட்சி, வார்டு எண் 5–ல் அமைந்துள்ள மணக்காடு தவ்ஹீத் பள்ளிவாசலுக்குச் சொந்தமான மையவாடி என்ற இடம் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்படாமல் இருக்கிறது. அதற்கு சுற்றுச் சுவர் அமைக்க முடியுமா என்று கேட்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் இந்த இடத்தைப் பதிவு செய்தால், அங்கு சுற்றுச்*

2023 மார்ச் 27]

சுவர் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். உடனடியாக அது வழங்கப்படும். எனவே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் சம்பந்தப்பட்ட வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்தால், சுற்றுச் சுவர் அமைப்பதற்கான நிதியைப் பெற்றுத் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி அவர்கள்.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தொகுதி குறித்த கேள்வியைத் தாங்கள் விரிவாகக் கேட்பது போன்று, எங்களுடைய தொகுதி குறித்த கேள்வியை விரிவாகக் கேட்பதற்கு எனக்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி, சிறுபான்மையினர் நிறைந்த ஒரு தொகுதியாகும். 100-க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள், 50-க்கும் மேற்பட்ட சர்ச்சுகள் உள்ள தொகுதி. கடையநல்லூர் வட்டம், அச்சன்புதூர் பேரூராட்சி, பழைய வார்டு எண் 5, புதிய வார்டு எண் 13-ல் இருக்கக்கூடிய தவ்ஹீத் பள்ளிவாசலுக்குச் சொந்தமான மையவாடி என்ற இடம் நீர்நிலைக்கு மிக அருகில் இருப்பதனால், மழைக்காலங்களில் அந்த நீர், மையவாடி இடத்திற்குள் புகுந்துவிடுகிறது. அந்தச் சமயத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்கின்றபோது நிறைய இடையூறுகள் ஏற்படுகின்றன. அதனால், கருணை உள்ளம் கொண்டு அங்கு சுற்றுச் சுவர் அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சுற்றுச் சுவர் கேட்கிறீர்கள் அல்லவா? மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கேள்வி நியாயமானது, ஏற்றுக்கொள்ள*

வேண்டியது. அதேநேரத்தில், பள்ளிவாசலுக்குச் சொந்தமான மையவாடியை வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்தால்தான், துறை ரீதியாக அதற்கு நிதி வழங்க முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். திருநெல்வேலியில் அவர் சொல்கிற இடங்களிலெல்லாம், இதற்கு முன்பு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்த 6 பகுதிகளுக்கு சுமார் 40 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் அவர்கள் அந்த இடத்தை வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்தால், உடனடியாக அங்கு சுற்றுச் சுவர் அமைக்கவும், பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவும், நிதியொதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி அவர்கள்.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல, ஏனைய பள்ளிவாசல்கள், வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்த பள்ளிவாசல்கள் மற்றும் சர்ச்சுகளில் அடக்கம் செய்யக்கூடிய இடங்கள் அந்தப் பகுதிகளில் இல்லாததால், வருவாய்த் துறையிலிருந்தோ அல்லது வேறு ஏதேனும் துறையிலிருந்தோ நிலங்கள் எடுத்து, அந்த மையவாடிகளுக்குக் கூடுதலாக இடங்கள் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் மனிதநேயத்தோடு, மையவாடி பகுதிகளை விரிவுபடுத்துவதற்காக, தனியாரிடத்தில் இடத்தை வாங்கியோ அல்லது அரசு சார்ந்த இடம் அருகிலிருந்தால் அதைப் பெற்றுத் தருவதற்கான முயற்சிகளோ சிறுபான்மையினர் நலத் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, சட்டமன்ற உறுப்பினர் அந்தப் பகுதியில் இருக்கின்ற அரசு சார்ந்த இடங்களைப் பெற்றுத் தருவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில்*

2023 மார்ச் 27]

கோரிக்கை வைத்தால், துறை சார்பாக அதற்குப் பரிந்துரை செய்து பெற்றுத் தருவோம். தனியாரிடத்தில் இடத்தை கிரயம் செய்வதற்கான பணியில் ஈடுபட்டாலும், பள்ளி வாசலுக்கும், தேவாலயங்களுக்கும், அடக்கஸ்தலங்களுக்கும், மயானப் பாதைகள் அமைப்பதற்கும், துறைமூலம் தலா ஒரு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தருவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதைச் செயல்படுத்த வாய்ப்புகள் உள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் புகாரிதாங்கல் தர்கா, பாளையங்கோட்டை ஜிந்தா மதரசா, ஜும்மா பள்ளிவாசல், ஆரூர் முஸ்லிம் ஜமாத், ஆரூர் மற்றும் தென்காசி மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்களில் 6 நிறுவனங்களுக்கு மட்டும் 40 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், மற்ற பகுதிகளும் பயன்பெறுவதற்காக முதலில் வக்ஃபு வாரியத்தில் நீங்கள் பதிவு செய்தால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நிதி வழங்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்காக ரூ.10 கோடி வழங்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டே அந்த நிதியை ஒதுக்கிக் கொடுப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்பதையும் தங்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

50—

இ-சேவை மையம்

***38556—திரு. J.L. ஈஸ்வரப்பன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கணியம்பாடி ஒன்றியம், சலமநத்தம் ஊராட்சியில் இ-சேவை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,